දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
2784832
2784807
2785617

ලේකම්
செயலாளர்
கோட்டை
Secretary
2784812

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. ………………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුරකෝට්ටේ, බත්තරමුල්ල

"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர

பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. ஈடி/1/21/1/2/50

දිනය
திகதி
Date 2009.10. 20

சுற்றுநிருப இலக்கம் 2009/33

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத்திணைக்கள ஆணையாளர்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கல்விக் கல்லூரி பீடாதிபதிகள்

சகல ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்

சகல பிரிவெனாதிபதிகள்

சகல அதிபர்களுக்கும்

**<u>தொற்று நோயாக பரவமுடியுமான புதிய இன்புலுவன்ஸா A/H1N1 பீடனை நிலைமைக்கு முகங்கொடுத்தல்</u>**

பாடசாலை மாணவர்கள் பலருக்கு புதிய இன்புலுவன்ஸா A/H1N1 நோய் தொற்றியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையச் சூழலில் அதிகமானோர் நடமாடுவதனால் இந்த வைரஸ் பரவுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகும்.

எனவே புதிய இன்புலுவன்ஸா A/H1N1 தொற்று நோய் தொடர்பாக அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்கள் கீழே காணப்படுகின்ற முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

1. சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் மூலம் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பெற்றோர்களை அறிவுறுத்தவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
2. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்நோய் அறிகுறிகள் ஏதேனும் (காய்ச்சல் மற்றும் இருமல், தொண்டை நோவு, தடிமன், சுவாசித்தலில் கஷ்டம்) காணப்படின் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை ஒன்றிலிருந்து தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதோடு நோய் குணமடையும் வரையில் பாடசாலைக்கு வருகைதராமல் இருக்கவும் ஆலோசனை வழங்கவும்.

3. நோய் தொற்றியுள்ளதாக இனங்காணப்பட்ட மாணவர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் இருப்பின் வீட்டில் தங்கி ஓய்வு எடுக்குமாறும், வீட்டிலிருந்து வெளியேறுவதனைக் குறைத்துக் கொள்ளுமாறும், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலிருந்து ஒதுங்கி நிற்குமாறும் ஆலோசனைகள் வழங்கல்.

4. ஏதாவதொரு பாடசாலையில் அல்லது கல்வி நிலையத்தில் A/H1N1 பீடித்துள்ளவர்கள் இருப்பதாக இனங்காணப்பட்டால் அந்நோய் பாடசாலைக்குள் மற்றும் சமூகத்தில் பரவுவதனைத் தடுப்பதற்கு பாடசாலைக்கு அருகாமையில் உள்ள சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலக ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படல். அவசியமானால் மாத்திரம் கல்வி அதிகாரிகளின் அனுமதிக்கு அமைவாக குறித்த பாடசாலை அல்லது கல்வி நிலையத்தை ஒரு சில தினங்களுக்கு மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இந்த தொற்று நிலைக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு மேற்குறித்த நடவடிக்கைகளை பின்பற்றுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைப் பத்திரத்தினையும் இத்துடன் அனுப்புகின்றேன்.

எம்.எம்.என்.டி பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி : செயலாளர்-சுகாதார பாதுகாப்பு மற்றும் போசனை அமைச்சு

இணைப்பு 1

புதிய இன்புலவன்ஸா A/H1N1 தொற்று நிலை இருப்பின் அது தொடாபான வசதிகள் காணப்படுகின்ற வைத்தியசாலைகள்

1. ஐ.டி.எச் வைத்தியசாலை - அங்கொடை
2. சீமாட்டி ரிஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை - பொரள்ளை
3. தேசிய வைத்தியசாலை - கொழும்பு
4. போதனா வைத்தியசாலை - களுபோவிலை
5. போதனா வைத்தியசாலை - ராகமை
6. போதனா வைத்தியசாலை - பேராதெனிய
7. போதனா வைத்தியசாலை - கராபிடிய, காலி
8. போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி
9. போதனா வைத்தியசாலை - குரணாகலை
10. போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
11. போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு
12. பெரிய ஆஸ்பத்திரி - ஸ்ரீ ஜயவர்தனபுர
13. பெரிய ஆஸ்பத்திரி - பதுள்ளை
14. பெரிய ஆஸ்பத்திரி - அம்பாறை
15. பெரிய ஆஸ்பத்திரி - அநுராதபுரம்
16. பெரிய ஆஸ்பத்திரி - மாத்தரை
17. ஆதார வைத்தியசாலை - சிலாபம்
18. ஆதார வைத்தியசாலை - பொலன்னறுவை
19. ஆதார வைத்தியசாலை - நுவரெலிய
20. ஆதார வைத்தியசாலை - வவுனியா

தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான நிறுவனங்கள்

1. சுகாதார அமைச்சின் தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் பிரிவு
   த சேரம் ஒழுங்கை, கொழும்பு – 10
   தோலைபேசி இலக்கம் - 011 2681548, 0112695112
2. சுகாதார அமைச்சின் சுகாதாரக் கல்வி அலுவலகம்
   கிங்ஸி வீதி, கொழும்பு 08
3. குடும்ப சுகாதார அலுவலகம் - பாடசாலைகள் சுகாதாரப் பிரிவு
   த சேரம் ஒழுங்கை, கொழும்பு – 10
   தோலைபேசி இலக்கம் - 011 2692746

தொற்றுநோயாக பரவக்கூடிய A/H1N1 பீடனையிலிருந்து பாதுகாப்பாக இருப்போம்